# வடமத்திய மாகாண அரச சேவைக்கு, மாகாண வருவாய் சேவையில் வரி அதிகாரி தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

## திருத்தம்

2025.09.25 திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நிவுஸ் பத்திரிகை ஊடாக பிரசுரிக்கப்பட்ட உரிய விளம்பரம் இல 02 மற்றும் 11 ஆம் பந்திகள் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுபகின்றது.

02. வயது- விண்ணப்பங்களை அனுப்பும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரரின் வயது 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (தற்போது அரச மற்றும் வட மத்திய மாகாண அரச சேவையில் ஏற்கனவே பணியாற்றும் அலுவலர்களுக்கான அதிகபட்ச வயது எல்லை 35 ஆண்டுகள் ஆகும்).

11. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் அடிப்படையில், உரிய நேரத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படாமல் போட்டிப் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டையை வழங்குவது, வேட்பாளர் இந்தப் பதவிக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்ததற்கான சான்றாகக் கருதப்படாது. அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் ஒரு பதவியை வகிக்கும் அதிகாரி ஒரு விண்ணப்பதாரராக இருந்தால், விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி திகதியில் அல்லது அதற்கு முன்னர் அவர்/அவள் பணியாற்றும் திணைக்களப் பிரதானியினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். திணைக்களப் பிரதானியினூடாக சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.